# சாத்தான்குளம் இரட்டைக்கொலை... இறுகும் விசாரணை... அடுத்த ‘அரெஸ்ட்’ பட்டியல் ரெடி!

சிறையில் பணியாற்றும் காவலர்களும், போலீஸ் மேலிடத்திலிருந்து வந்த உத்தரவுகள் குறித்து சில உள்விவகாரங்களை சி.பி.ஐ-யிடம் அப்படியே ஒப்பித்துள்ளார்களாம்.

**சாத்தான்குளம் போலீஸார் மீதான இரட்டைக்கொலை வழக்கில் அடுத்த ‘அரெஸ்ட்’ பட்டியலைத் தயார் செய்துள்ளது சி.பி.ஐ போலீஸ். இதனால், குற்ற வளையத்தில் இருப்பவர்கள் எந்த நேரமும் கைது செய்யப்படலாம்.**

இதற்கிடையே ஜூலை 20-ம் தேதி மாலை இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவர்களில் காவலர்கள் சாமதுரை, வெய்யில்முத்து, செல்லதுரை ஆகியோரை மூன்று நாள்கள் சி.பி.ஐ கஸ்டடியில் எடுத்து விசாரிக்க அனுமதி அளித்துள்ளது மதுரை மாவட்ட குற்றவியல் நீதிமன்றம்.

ஏற்கெனவே சாத்தான்குளம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் உட்பட ஐந்து பேரை இரண்டு நாள் காவலில் எடுத்து விசாரித்தது சி.பி.ஐ குழு. இந்த விசாரணையின்போது பல விஷயங்களை அவர்கள் ஒப்புக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக, எஸ்.ஐ-யான பாலகிருஷ்ணன், சம்பவத்தன்று இரவில் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் நடந்த சித்ரவதைகள் குறித்து எதையுமே மறைக்காமல் சி.பி.ஐ போலீஸாரிடம் சொல்லியிருக்கிறார் என்று கூறப்படுகிறது. தலைமைக் காவலர் ரேவதி அளித்த சாட்சியத்தில் சுட்டிக்காட்டிய பல சம்பவங்களை இன்ஸ்பெக்டர் ஸ்ரீதரும் எஸ்.ஐ-யான ரகு கணேஷும் ஒப்புக்கொண்டுள்ளனர் என்கிறது சி.பி.ஐ தரப்பு.



சிறையில் பணியாற்றும் காவலர்களும், போலீஸ் மேலிடத்திலிருந்து வந்த உத்தரவுகள் குறித்து சில உள்விவகாரங்களை சி.பி.ஐ-யிடம் அப்படியே ஒப்பித்துள்ளார்களாம். இதனால், சிறைத்துறையினர் சிலரையும், மேலிருந்து உத்தரவு வழங்கிய சிலரையும் இந்த வழக்கில் சேர்க்க முகாந்திரம் இருக்கிறதா என்று பரிசீலித்துவருகிறது சி.பி.ஐ. தவிர, ஜெயராஜ் மற்றும் பென்னிக்ஸ் ஆகியோரின் உடற்கூராய்வு அறிக்கையை மையப்படுத்தி அரசு மருத்துவர்களிடமும் விசாரணை செய்திருக்கிறார்கள்.

இது குறித்துப் பேசிய மருத்துவமனைப் பணியாளர்கள் சிலர், “பென்னிக்ஸ் உடலில் மட்டும் 52 இடங்களில் காயங்கள் இருந்தன. இதுபற்றி சி.பி.ஐ போலீஸார் மருத்துவர்களிடம் துருவித் துருவிக் கேட்டனர். `காயத்தின் தன்மைகள் எப்படியிருந்தன’, `உயிரிழப்புக்கான காரணம் என்ன?’ என்பது போன்ற பல கேள்விகளைக் கேட்டு மருத்துவர்கள் அளித்த சாட்சியத்தை கவனமாகக் குறித்துக் கொண்டனர் சி.பி.ஐ போலீஸார்” என்றார்கள்.





ஜெயராஜ் - பென்னிக்ஸ்

காவல் நிலையத்தில் ஜெயராஜ், பென்னிக்ஸ் ஆகியோர்மீது வழக்கு பதிவு செய்த எழுத்தர் பியூலா செல்வகுமாரி, விசாரணையின்போது முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்துள்ளார். அவர்மீதான விசாரணையில் திருப்தி இல்லாததால், மீண்டும் அவரை அழைத்து விசாரிக்கத் திட்டமிட்டுள்ளது சி.பி.ஐ.

இன்னொரு பக்கம் மனித உரிமை ஆணையத்தின் விசாரணையும் சூடுபிடித்துள்ளது. ஆணையத்தின் டி.எஸ்.பி-யான குமார், மதுரை சிறையிலிருக்கும் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் உள்ளிட்ட 10 பேரிடமும் விசாரணை நடத்தியிருக்கிறார். இது குறித்து சிறைத்துறை வட்டாரத்தில் பேசினோம். “சி.பி.ஐ, மனித உரிமை ஆணையம் என அடுத்தடுத்து நடக்கும் விசாரணைகளால் சிறைக்குள் இருக்கும் 10 பேரும் அரண்டு போயிருக்கிறார்கள். ஸ்ரீதர் தனி வார்டில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் இங்கு வந்த ஆரம்ப நாள்களில், தான் ஒரு இன்ஸ்பெக்டர் என்ற பந்தாவுடன் இருந்தார். எல்லோரையும் மரியாதையில்லாமல் அதட்டினார். சிறைக் காவலர்கள் அவரிடம் மிகவும் பவ்யமாக நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்த்தார். ஆனால்,

தொடர்ச்சியாக நடக்கும் விசாரணைகளுக்குப் பிறகு அவர் துவண்டுபோய், மாறிவிட்டார். கடந்த மூன்று நாள்களாக யாருடனும் அதிகம் பேசுவதில்லை. தனியாகவே இருக்கிறார்” என்றனர்.



ஸ்ரீதர், ரகு கணேஷ், பாலகிருஷ்ணன் ஆகியோரால் கொடூரமாகத் தாக்குதலுக்கு உள்ளான ராஜா சிங் உள்ளிட்ட சிலரும் தனித்தனியாக சி.பி.ஐ தரப்பில் புகார் அளித்திருக்கிறார்கள். அந்தப் புகார்கள் குறித்தும் ஏ.டி.எஸ்.பி செல்வன் தலைமையில் விசாரணை நடந்துவருகிறது.

இதுகுறித்துப் பேசிய தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி-யான ஜெயக்குமார், “விசாரணையில் போலீஸார் மீதான குற்றச்சாட்டுகள் உண்மை என்று தெரியவந்தால், துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். சாத்தான்குளம் காவல்நிலைய போலீஸார் தாக்கியதால் காயம் அடைந்ததாகச் சிறையில் இருக்கும் ராஜா சிங் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ரகு கணேஷ், பாலகிருஷ்ணன் ஆகியோர்மீது சாத்தான்குளம் காவல் நிலையத்தில் எட்டு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கையும் சி.பி.ஐ வசம் ஒப்படைப்பது குறித்து ஆலோசித்துவருகிறோம்” என்றார்.



ஜெயக்குமார்

ஜெயராஜின் மைத்துனர் தேசிங்கு ராஜா நம்மிடம், “சி.பி.ஐ அதிகாரிகள் நல்ல முறையில் விசாரணை நடத்திவருகிறார்கள். அவர்கள் விரைவாக விசாரணையை முடித்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பார்கள் என்கிற நம்பிக்கை உள்ளது” என்றார்.

## கைப்பற்றப்படுமா சி.சி.டி.வி பதிவுகள்?

சாத்தான்குளம் காவல்நிலையத்தில் இருந்த கண்காணிப்பு கேமரா குறித்து சி.பி.ஐ தரப்பு அடுத்தகட்ட விசாரணையைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சி.பி.ஐ விசாரணையில் காவல் நிலையத்தில் பதிவாகும் காட்சிகள், தினமும் அழியும் வகையில் செட் செய்யச் சொன்னது யார் என்பது குறித்து விசாரிக்கப்படும் என்று தெரிகிறது.

சாத்தான்குளம் காவல்நிலைய சி.சி.டி.வி-யின் ஹார்டு டிஸ்க் குறித்து சி.பி.சி.ஐ.டி ஐ.ஜி-யான சங்கரிடம் பேசினோம். “நாங்கள் விசாரணையைத் தொடங்குவதற்கு முன்பாகவே, கோவில்பட்டி குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி பாரதிதாசனின் விசாரணை தொடங்கிவிட்டது. சி.சி.டி.வி-யின் ஹார்டு டிஸ்க் உட்பட, காவல் நிலையத்திலிருந்து கைப்பற்றப்பட்ட பொருள்கள் அனைத்தும் நீதிமன்றம் மூலம் தடயவியல் நிபுணர்களின் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. தடயவியல் ஆய்வுக்குப் பிறகு நீதிமன்றம் மூலம் அவற்றைப் பெற்று, எங்கள் தரப்பில் ஆய்வு செய்யலாம் என்று திட்டமிட்டிருந்த நிலையில்தான் வழக்கு சி.பி.ஐ-க்கு மாற்றப்பட்டுவிட்டது” என்றார்.

**இது குறித்து நம்மிடம் பேசிய மதுரை மக்கள் கண்காணிப்பகத்தின் இயக்குநரும் வழக்கறிஞருமான ஹென்றி டிபேன்,** “இந்த வழக்கைப் பொறுத்தவரை சி.சி.டி.வி காட்சிகள் கூடுதல் ஆதாரம்தான். சம்பவத்தின்போது பணியிலிருந்த பெண் தலைமைக் காவலர் ரேவதியின் சாட்சியம்தான் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இருப்பினும் சி.சி.டி.வி காட்சிகள் கிடைத்தால், பென்னிக்ஸும் ஜெயராஜும் போலீஸாரால் எவ்வாறு துன்புறுத்தப்பட்டார்கள், எவ்வளவு நேரம் துன்புறுத்தப்பட்டார்கள், அதில் ஈடுபட்டவர்கள் எத்தனை பேர், ஸ்டேஷனிலிருந்து அவர்களை வெளியே அழைத்துச் சென்றபோது அவர்களின் நிலை என்ன என்பதுவரை இந்த வழக்கு குறித்த அனைத்துக் கேள்விகளுக்கும் விடை கிடைத்துவிடும். அவற்றை இந்த வழக்குக்கான ஆதாரமாக சி.பி.ஐ-யும் நீதிமன்றமும் நிச்சயம் எடுத்துக்கொள்ளும்” என்றார்.




சங்கர் - ஹென்றி டிபேன்

“சி.சி.டி.வி பதிவுகளில் தினமும் அழியும் வகையில் புரோகிராம் செய்ய முடியுமா, அப்படியெனில் அழிந்த பதிவுகளை திரும்ப எடுக்க வாய்ப்பு உள்ளதா?” என்று ஹார்டு டிஸ்க் ரெக்கவரி ஸ்பெஷலிஸ்ட் பாலாஜியிடம் கேட்டோம். “சி.சி.டி.வி காட்சிகளை தினமும் அழியும் வகையில் ‘செட்’ செய்ய முடியும். சி.சி.டி.வி-யைப் பொறுத்தவரையில் ஹார்டு டிஸ்க்தான் மிக முக்கியம். மிகக் குறைந்த மெமரிகொண்ட ஹார்டு டிஸ்க்காக இருந்தால்கூட, ஏழு நாள்களில் இருந்து 10 நாள்கள் வரை பதிவுகள் இருக்கும். எனவே, எளிதாக ரெக்கவரி செய்துவிட முடியும். ஆனால், சாத்தான்குளம் போலீஸார் ஹார்டு டிஸ்க்கை மாற்றியிருந்தால் சிக்கல்” என்றார்.

https://www.vikatan.com/news/crime/sathankulam-father-and-son-murder-case-cbi-enquiry